பதிவு எண் : M. 6311 ★ தொலைபேசி: 51331 ★ நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

# நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர் : இரா. செழியன் எம்.ஏ. எம்.பி.

மலர் : 15] சென்னை: மார்கழி 5 (20—12—67) புதன் ★ வெளியூர்: மார்கழி 6 (21—12—67) வியாழன் [இதழ்: 157

## நகரங்களில் வளரும் மக்கட் தொகை!

புதுடில்லி, டிச. 20—

1961-ம் ஆண்டுடன் ஒப்பிடுகையில், 1966-ல். கிராமப் பகுதிகளில் மக்கள் தொகை 11.07 சதவிகிதமும், நகரப் பகுதிகளில் 20.15 சதவிகிதமும் அதிகரித்திருக்கிறது.

1966 ஜூலையில், நாட்டின் மொத்த மக்கள் தொகை, 49.5-கோடியாகும்; இவர்களில் 40-கோடிபேர் கிராமப் பகுதிகளில் வசிக்கின்றனர்.

தமிழகத்தின் மொத்த மக்கள் தொகை 4.1-கோடியாகும்.

ஆந்திரத்தின் மக்கள் தொகை 3.92 கோடி.

பீகாரின் மக்கள் தொகை 5.2-கோடி.

உ. பி. மக்கள் தொகை 8.2-கோடி.

# மூண்டுவிட்டது---மொழிப் போர்!

## மொழிக் கொள்கையில் புதிய மாற்றம்

### நாடாளுமன்ற தி.மு.க. முயற்சி

### அறிஞர் அண்ணா கருத்தை ஏற்குமாறு கி. மனோகரன் வலியுறுத்தல்

நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டு இப்போது மாநிலங்கள் அவையின் முன்னே இருக்கும் ஆட்சி மொழித் திருத்த மசோதாவில் நல்ல மாற்றங்களை உண்டாக்கும் முயற்சியை, புதுடில்லியில் திராவிட முன்னேற்றக் கழக நாடாளுமன்றக் குழு மேற்கொண்டிருக்கிறது.

நாடாளுமன்றத்திலும், மாநிலங்கள் அவையிலும் தங்களுக்குப் பெரும்பான்மை இருப்பதை மட்டுமே சாதகமாகக் கொள்ளாமல், நாட்டு மக்களிடையே பொதுவாக நிலவும் கருத்தைக் காங்கிரசு ஏற்க வேண்டுமென்று கழக நாடாளுமன்றக் குழு கருதுகிறது.

"நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட மசோதாவும் அதை ஒட்டிய தீர்மானமும் திராவிட முன்னேற்றக் கழகத்துக்கு ஒத்துவராதன" என்பதைத் திட்டவட்டமாக விளக்கினார் திரு. கி. மனோகரன்.

"நாடாளுமன்றத்தில் உள்ள காங்கிரசு—பிற கட்சிகளைச் சேர்ந்த உறுப்பினர்கள், நாட்டில் நிலவும் சூழ்நிலையையும், திருத்தங்களை எதிர்த்துக் காங்கிரசுத் தலைவர் காமராசர் போன்றோர் பேசியிருக்கும் கருத்துக்களையும் கூர்ந்து ஆய்ந்து அவற்றுக்கும் தீர்ப்பளிக்கும் வகையில் நடந்துகொள்வார்கள்" என்று தாம் கருதுவதாக அவர் தெரிவித்தார்.

"இன்னமும் ஒன்றும் காலங்கடந்துவிடவில்லை; முன்னணி நீதிபதிகள், கல்வித்துறை அறிவாளர்கள், கட்சித் தலைவர்கள், மற்றவர்களைக் கூட்டிவைத்து, தலைமை அமைச்சர் ஒரு சமரச ஏற்பாடு காண இன்னமும் நேரம் இருக்கிறது."

தமிழக முதல்வர் அண்ணா அவர்கள் சொன்னது போல், 'அமைதியான சூழலில் சனநாயக முறைகளின் மூலம் மொழிப் பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டும்' என்றே புதுடில்லியில் உள்ள தி.மு. கழக நாடாளுமன்ற உறுப்பினர்கள் கருதுகின்றனர்.

"என்னதான் மத்திய அரசின் தலைவர்கள் வாக்குறுதிகள் வழங்கினாலும், இந்தி தெரியாத மக்களை நிரந்தரமாகத் தொல்லைக்கு ஆளாக்கும் வகையில்தான் இந்தியைத் திணித்திட இந்தி வெறியர்கள் முனைகிறார்கள்" என்று வெறுப்புடன் அவர்கள் தங்கள் சந்தேகத்தைத் தெரிவித்தனர்!

## முதற் களம்--ஆராய்ச்சிக்கூடம்!

'மொழிப் போர் மூண்டுவிட்டது' என்பதற்கான அறிகுறிகள் தெரிகின்றன! அதன் விளைவாய், தேசிய விஞ்ஞான ஆராய்ச்சி நிலையங்கள் செயலிழந்து நிற்கின்றனவாம்!

தேசிய விஞ்ஞான ஆராய்ச்சிக்கூடங்களின் தென்னகக் கிளைகள், தங்கள் கடிதங்களைக் கடந்த இரண்டு வாரங்களாகத் தமிழ்---தெலுங்கு---மலையாள மொழிகளில் அனுப்பிவருகின்றனவாம்!

**அதற்குக் காரணம், இந்தி மாநிலக் கிளைகளில் இருந்து வந்த கடிதங்கள், இந்தியில் இருந்ததுதான்!**

**விஞ்ஞானத் துறையில் இப்படி வெறித்தனமாக இந்தியைத் திணிப்பதை இயல்பாகவே தென்னவர் வெறுக்கத்தானே செய்வார்கள்!**

ஆங்கிலத்தில் வரும் கடிதங்களுக்கு ஐந்தே நிமிடத்தில் பதிலளித்த விஞ்ஞானிகள், இப்போது இந்திக் கடிதம் ஒன்றுக்கு ஒன்றரை மணி நேரம் செலவழிக்க வேண்டியிருக்கிறதாம்!

"கேரளத்திலிருந்து கடிதங்கள், மலையாள மொழியில் மட்டுமே வருகின்றன" என்று புதுடில்லிக்காரர்கள் புகார் செய்கிறார்களாம்!

**ஆனால், தூண்டிவிட்டதும் அவர்கள்தானே?**

## தி.மு.க.பாணியில் புதிய கட்சி!

### வங்கத்தில் துவங்குகிறது

கல்கத்தா, டிச. 19—

தமிழகத்தில் தி. மு. கழகம் இயங்குவதைப்போல், வங்கத்திலும் மாநில அடிப்படையில், கலாசார—பொருளாதார—அரசியல் நலன்களுக்கான கட்சியொன்று நிறுவப்பட இருப்பதாக முன்னாள் ஐக்கிய முன்னணிக் கட்சி அமைச்சரான ஜகாங்கீர் கபீர் தெரிவித்தார்.

"இந்தக் கட்சி, சனவரி 8-ஆம் நாள் கூடவிருக்கும் மாநாடு ஒன்றில் நிறுவப்படும்" என்றார் அவர்.

## தொழில் துறையில் மந்த நிலை

### 400-க்கு மேற்பட்ட தொழில்களில் உற்பத்தி பாதிப்பு

புதுடில்லி, டிச. 20—

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள பல்வேறு மூலப் பொருள்களின் தட்டுப்பாடு காரணமாக, 400-க்கு மேற்பட்ட தொழில்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

பொறியியல் துறை, பஞ்சாலைத் தொழில், சர்க்கரை ஆலை, சணல் ஆலை, சைக்கிள் தொழிற்சாலை, மின்சாரக் கருவிகள் தொழிற்சாலை ஆகியவற்றின் உற்பத்திகள் பாதிக்கப்பட்டுள்ளன.

நாடாளுமன்ற மேலவையில், தொழிலாளர் துறையமைச்சர் திரு. ஜெயசுக்லால் ஹாத்தி இது குறித்துத் தெரிவித்த தகவல்கள் வருமாறு:—

"தற்போது கிடைத்துள்ள தகவல்படி, இத்தொழிற்சாலைகளில் கடந்த ஆறு மாத காலத்தில் ஆட்குறைப்புச் செய்யப்பட்டதன் விளைவாக 95,000 தொழிலாளர்களும், 'லே ஆப்' கொடுக்கப்பட்டதன் விளைவாக 2½ இலட்சம் தொழிலாளர்களும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

ஆந்திரம், பீகார், குசராத், அரியானா, மத்தியப் பிரதேசம், பஞ்சாப், உ. பி., டில்லி, கோவா, டாமன், டையூ, புதுவை ஆகிய பகுதிகளில் மூலப் பொருள் தட்டுபாடு, கையிருப்புப் பற்றுக் குறை, இயந்திரக் கோளாறுகள், பொருளாதார நெருக்கடி ஆகிய காரணங்களால் கதவடைப்பும், 'லே-ஆப்'பும் செய்யும் நிலை ஏற்பட்டிருக்கின்றது."

அளவிலும் போக்குவதில் மிகவும் கருத்தாய் இருக்கிறது என்பதையும் வலியுறுத்திக் கூற விரும்புகிறது.

## பொதுமக்களுக்கு ஒரு விளக்கம்

### ஒரு நாளேட்டின் செய்திக்கு அரசு மறுப்பு

சென்னை, டிச. 19—

மாவட்டங்களிலுள்ள அதிகாரிகளுக்கும், இலாகா தலைவர்களுக்கும் செய்துகொள்ளப்படும் புகார்களும், முறையீடுகளும்—குறிப்பாக அமைச்சரவை மாற்றத்திற்குப்பின் கவனிக்கப்படுவதில்லை என்றும், அமைச்சர்களுக்குச் செய்துகொள்ளப்படும் புகார்கள்கூடக் கவனிக்கப்படுவதில்லை என்றும், சென்னை நாளேடு ஒன்றில் வந்த செய்தி, அரசின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டுள்ளது.

இந்த வகையில், அரசுக் கொள்கையில் மாற்றம் எதுவும் இல்லை என்பதைத் தெளிவுபடுத்த அரசு விரும்புகிறது. அத்துடன், பொதுமக்களின் குறைகளை இயன்ற அளவு மிக விரைவாகவும், மிக அதிக

## காமராசருடன் பேசிப் பயனில்லை!

### கழகத்துடன் கலந்து இணக்கமான முடிவு காண்க!

### டில்லிக்கு அரிகிருஷ்ண மகதாப் கூறும் யோசனை

"கிட்டத்தட்ட திராவிட முன்னேற்றக் கழகத்தின் கருத்தை ஒட்டியே தமிழ் நாட்டுக் காங்கிரசின் போக்கும் இருக்கும் என்பதால், காமராசரைத் தலைவராகக் கொண்ட காங்கிரசை நம்புவதில் பலனில்லை.

"எனவே, மத்திய அரசு, திராவிட முன்னேற்றக் கழகத்தோடு நேரடியாகத் தொடர்பு கொண்டு ஒரு சுமூகமான ஏற்பாட்டுக்கு வந்தால்தான், அதைத் தி. மு. கழகத் தலைவர்கள் முழுமையாகச் செயல்படுத்த முடியும்.

"காமராசரின் காங்கிரசின் மூலம் இணக்க முயற்சிகளில் ஈடுபடுவது அர்த்தமற்ற வீண் விளையாட்டு! அந்த விளையாட்டின் விளைவைத்தான் வங்காளத்திலும், வேறு பல மாநிலங்களிலும் பார்த்தோம்!'

என்று, ஒரிசா மாநில ஜன காங்கிரசுக் கட்சித் தலைவர் அரிகிருஷ்ண மகதாப், புவனேசுவரத்தில் வெளியிட்ட அறிக்கை ஒன்றில் குறிப்பிட்டிருக்கிறார்.

# இரண்டாவது உலகத் தமிழ் மாநாடு

## நிகழ்ச்சிகள் விவரம்---அமைச்சர் கருணாநிதி விளக்கம்

கீழ்த்திசை மொழி வல்லுநர் கழகத்தின் 26-வது கூட்டம் 1964-ம் ஆண்டில் புதுடில்லியில் நடைபெற்றதன் தொடர்பாகத் தமிழ் ஆராய்ச்சியில் ஆர்வமுள்ள அறிஞர் பெருமக்கள் சிலர், பன்னாட்டறிஞர் தமிழ் ஆராய்ச்சிக் கழகத்தை நிறுவினர்; பிரெஞ்சு நாட்டைச் சேர்ந்த பேராசிரியர் பில்லியோசா, அமெரிக்க நாட்டைச் சேர்ந்த பேராசிரியர் ஏமதா, இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்த பேராசிரியர் பரோ, ஹாலந்து நாட்டைச் சேர்ந்த பேராசிரியர் கூய்ப்பர், செக்கோசுலோவகியா நாட்டைச் சேர்ந்த பேராசிரியர் காமில் சுவலபெல் ஆகியோர் அக்குழுவில் தலையாய உறுப்பினர் ஆவர்.

பன்னாட்டறிஞர் தமிழ் ஆராய்ச்சிக் கழகத்தின் சார்பில் முதல் உலகத் தமிழ்க் கருத்தரங்கு 1966-ம் ஆண்டு ஏப்ரல் திங்களில் கோலாலம்பூரில் நடைபெற்றது.

இரண்டாவது கருத்தரங்கு தமிழகத் தலைநகரமான சென்னை மாநகரில் 1968-ம் ஆண்டு சனவரித் திங்கள் 3-ம் நாளிலிருந்து 11-ம் நாள்வரையில் நடைபெறவிருக்கிறது.

இரண்டாவது உலகத் தமிழ்நாட்டு நிகழ்ச்சிகள் என்னென்ன—யார் யார் அதில் பங்கேற்கின்றனர்—என்பனபோன்ற விவரங்களையெல்லாம், மாநாட்டுச் செயற்குழுவின் துணைத்தலைவரும்—மாநாட்டின் பொதுமக்கள் தொடர்புக் குழுவின் தலைவருமான அமைச்சர் திரு. மு. கருணாநிதி அவர்கள், வானொலி மூலம் ஆற்றிய உரையில் விளக்கினார்; அது வருமாறு:—

### அண்ணா சிலை திறப்பு

கருத்தரங்கு சன. 3-ம் நாள் தொடங்குகிறதே எனினும், சனவரி முதல் நாளிலேயே மாநாட்டின் தொடக்கத்திற்கான மணிமகுடம் தமிழ்த் தாய்க்குச் சூட்டப்படுகிறது. ஆம்; அன்றுதான் தமிழக முதல்வர் அறிஞர் அண்ணா அவர்களின் திருவுருவச் சிலையை மக்கள் திலகம் எம்.ஜி.ஆர். அவர்கள் வழங்கிட—பெருந்தகையாளர் திரு. ஏ. இராமசாமி (முதலியார்) அவர்கள், தலைநகரில் திறந்துவைக்கிறார்கள்.

### குடியரசுத் தலைவர் வருகை

சனவரி 2-ம் நாள், உலகத் தமிழ் மாநாட்டில் கலந்துகொள்ள இந்தியக் குடியரசுத் தலைவர் மேன்மைமிகு டாக்டர் ஜாகிர் உசேன் அவர்கள் வருகிறார்கள்; விமானநிலையத்தில் மாலை 6-மணிக்கு தமிழகம் அவரை வரவேற்கும்.

### தமிழ் வளர்த்த சான்றோருக்குச் சிலைகளெடுக்கும் விழா

அன்று மாலை 6-30 மணிக்குக் கடற்கரையில் தமிழை வளர்த்த சான்றோருக்கும் ஆன்றோர்க்கும் சிலைகளெடுக்கும் விழா சீர்மேவ—சிறப்போங்க நடைபெறவிருக்கின்றது.

#### திருவள்ளுவர்

உலகப் பொதுமறை வகுத்த திருவள்ளுவர் சிலையை நடிகர் திலகம் சிவாஜி கணேசன் அவர்கள் வழங்கிட—தமிழகக் கல்வி அமைச்சர் திரு. இரா. நெடுஞ்செழியன் அவர்கள் தலைமையில்—முத்தமிழ்க் காவலர் கி. ஆ. பெ. விசுவநாதம் அவர்கள் திறந்துவைக்கிறார்.

#### மூதாட்டி அவ்வையார்

முடிமன்னர் பாராட்டிய மூதாட்டி அவ்வைப் பெருமாட்டியின் சிலையை மாநகராட்சி வழங்கிட—செய்தித்துறை அமைச்சர் திருமதி சத்தியவாணிமுத்து தலைமையில்—திரு. எஸ். எஸ். வாசன் எம்.பி. திறந்துவைக்கிறார்.

#### கவியரசர் கம்பர்

கவியரசர் கம்பர் சிலையை கோவை மாவட்ட மக்கள் வழங்கிட—வேளாண்மைத்துறை அமைச்சர் திரு. ஏ. கோவிந்தசாமி அவர்கள் தலைமையில்—முன்னாள் முதல்வர் திரு. பக்தவத்சலம் அவர்கள் திறந்துவைக்கிறார்.

#### புலவர் ஜி. யு. போப்

அருந்தமிழ் வளர்த்த ஆங்கில நாட்டுப் பெரும் புலவர் ஜி. யு. போப்பின் சிலையை தென்னிந்தியத் திருச்சபை வழங்கிட—அவைத் தலைவர் திரு. ஆதித்தனார் அவர்கள் தலைமை ஏற்க—பிஷப் திரு. நியூபிகின் திறந்துவைக்கிறார்.

#### புலவர் கால்டுவெல்

திராவிட மொழியின் ஒப்பிலக்கணம் வகுத்த அயர்லாந்து நாட்டு ஆங்கிலப் புலவர் கால்டுவெல்லின் சிலையை தென்னிந்திய திருச்சபை வழங்கிட—மேல்சபைத் தலைவர் திரு. மாணிக்கவேலர் அவர்கள் தலைமையில்—பன்மொழிப்புலவர் திரு. கா. அப்பாதுரையார் அவர்கள் திறந்துவைக்கிறார்.

#### கவியரசர் பாரதியார்

"யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழிபோல் இனிதாவது எங்கும் காணோம்" எனச் சொன்ன பாரதியின் சிலையை மாநகராட்சி வழங்கிட—சட்டத்துறை அமைச்சர் திரு. மாதவன் அவர்கள் தலைமையில்—நாமக்கல் கவிஞர் இராமலிங்கனார் திறந்துவைக்கிறார்.

#### புரட்சிக் கவி. பாரதிதாசன்

"எங்கள் வாழ்வும் எங்கள் வளமும் மங்காத தமிழ்" என்று சங்கம்முழங்கிய புரட்சிக்கவி பாரதிதாசனின் சிலையை மாநகராட்சி வழங்கிட—உள்ளாட்சி அமைச்சர் திரு. முத்துசாமி தலைமையில்—பேராசிரியப் பெருந்தகை திரு. வரதராசனார் அவர்கள் திறந்துவைக்கிறார்.

#### வ. உ. சிதம்பரனார்

குறளுக்கு உரை தொடுத்து—விடுதலைக் குரலும் கொடுத்து, கப்பலோட்டிய தமிழன் வ.உ.சி.யின் சிலையை மாநகராட்சி வழங்கிட—உணவு அமைச்சர் திரு. மதியழகன் அவர்கள் தலைமையில்—தமிழவேள் பி. டி. இராசன் அவர்கள் திறந்துவைக்கிறார்.

#### வீரமா முனிவர்

இன்பத் தமிழ் வளர்த்த இத்தாலிய நாட்டுச் செம்மல் வீரமா முனிவரின் சிலையை மயிலை ஆர்ச் பிஷப் அவர்கள் வழங்கிட—பொதுநல அமைச்சர் திரு. சாதிக் பாட்சா அவர்கள் தலைமையில்—ஆர்ச் பிஷப் அருள் திரு. அருளப்பா அவர்கள் திறந்துவைக்கிறார்.

#### கற்புக்கரசி கண்ணகி

வழக்குரைத்து வளைந்த பாண்டியன் செங்கோலை நிமிர்த்தி, வஞ்சி மூதூரில் அன்றொரு நாள் சிலையான கற்புக்கரசி கண்ணகியின் சிலையைச் சிலம்புச் செல்வர் திரு. ம. பொ. சிவஞானம் அவர்கள் திறந்துவைக்கிறார்; நான் தலைமைவகிக்கிறேன்.

### மாபெரும் பவனி

இவ்விதம் சனவரி முதல் இரண்டு நாட்களில் தகைமையாளர்களின் சிலைகளைத் தலைநகரில் அமைப்பது கண்கொள்ளாக் காட்சி.

இந்தக் காட்சியினை வென்றிடும் விதத்தில் மறுநாள் (சனவரி 3-ம் நாள்), "பார் சிறுத்ததால் படை பெருத்ததோ — படை பெருத்ததால் பார் சிறுத்ததோ" என—பார்ப்போர் வியப்புறும் வண்ணம், பாண்டியர், சோழர், சேரர் ஆண்டிருந்த அந்நாளை நினைவுறுத்தும் வகையில், பவனியொன்று தலைநகரில் நடைபெறும்.

26 அலங்கார வண்டிகள் கலந்துகொள்ளும் அந்தப் பவனியில் தமிழரின் மொழி—நாகரிகம்—கலை — பண்பாடு — வாழ்க்கை முறை முதலியவற்றைச் சித்தரித்துக் காட்டும் காட்சிகள் இடம்பெறும்.

திருவள்ளுவர், இளங்கோ, திருப்பாவை பாடிய ஆண்டாள், நக்கீரர், இன்னோரன்ன இலக்கியத் தமிழ் ஏந்தல்களின் திருவுருவங்கள்—சங்க இலக்கியக் காட்சிகளான கோட்டை முற்றுகை—அதியமானிடம் அருநெல்லிக்கனி பெற்ற அவ்வை—'மாடுகட்டிப் போர் அடித்தால் மாளாது செந்நெல்' என்று 'ஆனைகட்டிப் போரடித்த அழகான தென் மதுரை' முதலிய காட்சிகள் எல்லாம் இடம்பெறும்.

அதனைக் காணக் காண—குறிஞ்சியும், முல்லையும், மருதமும், நெய்தலும் வளம் வழங்கிய அந்நாள் தமிழகத்தில் நாம் நடைபோடுகிறோமென்ற உணர்வே ஒவ்வோர் தமிழ் மகனுக்கும் ஏற்படும்.

இந்த அலங்கார வண்டிகளுக்கு இடைவெளிகளில் கல்லூரி மாணவர்களும்—மாணவிகளும், உயர்நிலைப் பள்ளி மாணவர்களும்—மாணவிகளும், ஆசிரியர்களும்—ஆசிரியைகளும், சீரணித் தொண்டர்களும் சீருடையணிந்து, மாநாட்டுக் கொடியேந்தி செல்வார்கள்; அப்படிச் செல்பவர்களின் தொகை ஏறத்தாழ ஏழாயிரம் ஆகும்.

இவ்வாறு முன்னேறிச் செல்கின்ற ஊர்வலத்தின் நீளம், சற்றொப்ப முக்கால் மைல் இருக்கும்.

இதனைக் கண்டுகளிக்க வருகின்ற பொதுமக்கள் சாலையின் இருமருங்கிலும் நின்று பார்க்கத்தக்க அளவுக்கு வசதியும் கட்டுக்கோப்பும் பாதுகாப்பும் காவல் துறையினரால் செய்யப்பட்டு வருகின்றன.

குடியரசுத் தலைவர் அவர்களும் மாநாட்டில் கலந்துகொள்கின்ற வல்லுநர்களும் ஊர்வலத்தைக் கண்டுகளிப்பதற்கு அரசினர் கலைக் கல்லூரியின்முன் பெரியதோர் மேடை அமைக்கப்படுகின்றது.

ஊர்வலம், சனவரி 3-ம் நாள் பிற்பகல் 2-மணிக்குச் சென்னைத் தீவுத் திடலில் தொடங்கி—ஆம்; ஐலந்து மைதானத்தில் தொடங்கி—மாலை 5-30 மணியளவில் கடற்கரையில் முடிவுறும்.

### தொடக்க விழா

ஊர்வலக் காட்சியினைப் புறங்காணும் வகையில், நீலத்திரைக் கடல் ஓரத்தில் அன்று மாலை 6-30 மணிக்கு உலகத் தமிழ் மாநாட்டின் தொடக்க விழா நடைபெறும்.

குடியரசுத் தலைவர் டாக்டர் ஜாகீர் உசேன் அவர்கள், உலகத் தமிழ் மாநாட்டுத் தொடக்க விழாப் பேருரையை நிகழ்த்துவார்.

தமிழக ஆளுநர் திரு. உஜ்ஜல் சிங் அவர்கள் மாநாட்டு மலரினை வெளியிடுவார்.

மாநாட்டின் வரவேற்புக் குழுவின் துணைத் தலைவர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள், வந்திருக்கும் தமிழக மக்களை வரவேற்பார்.

மலர்க் குழுவின் சார்பில் மக்கள் திலகம் எம். ஜி. ஆர்., தாய்க் குலத்தின் சார்பில் அமைச்சர் திருமதி சத்தியவாணிமுத்து, பன்னாட்டறிஞர் தமிழ் ஆராய்ச்சிக் குழுவின் சார்பில் பேராசிரியர் பில்லியோசா, வரவேற்பு நல்லுரையை வழங்கிடுவர்.

குடியரசுத் தலைவர் அவர்களுக்கு சென்னை நகர மக்களின் சார்பில் மாநாகராட்சி மன்றமளிக்கும் வரவேற்பினை மேயர் வழங்கிடுவார்.

திருக்குறள் ஆராய்ச்சியின் வாயிலாகப் பழந் தமிழ்க் கலை, பண்பாடு ஆராய்ச்சிகளைப் பல்கலைக் கழகங்களில் நடத்திடும் பெருநோக்குடன், தமிழக அரசு வகுத்துள்ள பெருந் திட்டத்தின் அடிப்படையில் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திற்கான நிதியை உணவு அமைச்சர் திரு. கே. ஏ. மதியழகன் அவர்களும், மதுரைப் பல்கலைக் கழகத்திற்கான நிதியை உள்ளாட்சி அமைச்சர் திரு. முத்துசாமி அவர்களும் அளிக்கிறார்கள்.

சென்னைப் பல்கலைக் கழகத்திற்கான நிதியை அளிக்கும் பேற்றினை யான் பெற்றுள்ளேன்.

இசையரசு தண்டபாணி தேசிகர் அவர்களின் தமிழ்த் தாய் வாழ்த்துடன் தொடங்கி, தாகூரின் தேசியக் கீதத்துடன் முடிவுறும் இந்தத் திருவிழாவிற்குத் தலைமை ஏற்பவர் தமிழகத்தின் முதல்வர் அறிஞர் அண்ணா அவர்கள் ஆவார்.

இவ்விதம் மூன்றும் நாள் விழா வெற்றி முடி சூட்டிக்கொள்ளும்.

### கவின்மிகு கண்காட்சி!

அதே நாளாகிய சனவரி 3-ம் நாள் காலையில், உலகத் தமிழ் மாநாட்டினையொட்டிக் கவின்மிகு கண்காட்சி ஒன்றினை, டாக்டர் ஏ. இலட்சுமணசாமி (முதலியார்) அவர்கள் தலைமையில்—மூதறிஞர் திரு. இராஜாஜி அவர்கள் திறந்துவைக்கிறார்கள்.

அதுபோது, மாநாட்டிற்கென மத்திய அரசு ஒப்புதல் வழங்கியுள்ள அஞ்சல் தலை இராஜா சர். முத்தையா (செட்டியார்) முன்னிலையில் வெளியிடப்படும்.

### கருத்தரங்கு துவக்கம்

சனவரி 4-ம் நாள் காலை 9-30 மணிக்குப் பல்கலைக் கழக நூற்றுண்டு விழா மண்டபத்தில் கருத்தரங்கு தொடங்கும்.

மலேசியா, சிங்கப்பூர் ஆகிய நாடுகளிலிருந்து 28 பிரதிநிதிகளும், இலங்கையிலிருந்து 12 பிரதிநிதிகளும், தமிழ்நாட்டிலிருந்து 150 பிரதிநிதிகளும், தமிழ்நாடு நீங்கிய ஏனைய இந்திய மாநிலங்களிலிருந்து 20 பிரதிநிதிகளும், அமெரிக்கா — இங்கிலாந்து — ஹாலந்து — செர்மனி —பிரான்சு முதலிய வெளிநாடுகளிலிருந்து சுமார் 100 பிரதிநிதிகளும் இந்தக் கருத்தரங்கில் கலந்துகொண்டு — பேராசிரியர் பில்லியோசா தலைமையில் ஒவ்வொரு நாளும் காலை 9 மணியிலிருந்து மாலை 5 மணிவரையில் 11-ம் நாள் முடிய தமிழ் ஆராய்ச்சி பற்றிய உரைகள் ஆற்றுவர்; விவாதங்கள் நடத்துவர்; விளக்கங்கள் வழங்குவர்.

கருத்தரங்கு நிகழ்ச்சியினையொட்டி, மாலை நேரங்களில் நூற்றுண்டு விழா மண்டபத்திலும், அண்ணாமலை மன்றத்திலும் கருத்தரங்குப் பிரதிநிதிகளுக்காக ஏற்பாடு செய்யப்பட்டுள்ள கலை நிகழ்ச்சிகள் நடைபெறும்.

வெளிநாட்டுப் பிரதிநிதிகள் 11-ம் நாள் இரவு புறப்பட்டுத் தமிழகத்தில் கலை மணக்கும் பல்வேறு இடங்களுக்குச் சுற்றுலாச் சென்று, 18-ம் நாள் காலை சென்னைக்குத் திரும்புவர்.

### ஏழு நாள் நடைபெறும் தமிழ் விழா

உலகத் தமிழ்க் கருத்தரங்கினால் ஏற்படக்கூடிய பயன், தமிழ் ஆராய்ச்சியைப் பொறுத்தவரையில் இன்றைய தமிழகத்திற்கும் வருங்காலத் தமிழகத்திற்கும் மெத்தவும் பயன் தரக்கூடியதே.

ஆயினும் உலகத் தமிழ் மாநாட்டின் நிகழ்ச்சிகளைக் காண்பதற்குத் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலுமிருந்து வருகின்ற பொதுமக்களைப் பொறுத்தவரையில், அவர்களின் கவனத்தை ஈர்க்கவல்லதாக இக்கருத்தரங்கு அமைய இயலாது அல்லவா? இதனையுணர்ந்த மாநாட்டுக் குழுவினர் — தமிழக முதல்வரின் அறிவுரைக்கிணங்க — கருத்தரங்கினையொட்டி ஏழு நாட்கள் பொதுமக்கள் அனைவரும் கலந்துகொள்ளத்தக்கவகையில் பெரியதோர் தமிழ் விழாவினைச் சென்னையில் நடத்திட வேண்டுமெனத் தீர்மானித்தார்கள்.

அதற்கொப்ப, சென்னைத் தீவுத் திடலில்—ஐலண்டு மைதானத்தில்—எழிலும் எழுச்சியும் குலுங்கிடும் வண்ணம் ஏழு நாட்கள், இன்பத் தமிழ் மணக்க மணக்க—இலக்கியச் சுவைப் பெருகப் பெருக—கவிநயம் கனியக் கனிய—கலைக் காட்சி, இசை, இயல், கூத்து, இன்னோரன்ன நிகழ்ச்சிகளுக்குப் புறப்பணிக் குழுவினர் அமைப்பு வேலைகளைத் தொடங்கியுள்ளனர்.

சுருங்கச் சொன்னால், புறப்பணிக் குழுவினர் ஐலந்து மைதானத்தில் பூம்புகார் நகரத்தையே நிர்மாணிக்கிறார்கள் எனலாம்.

### மாநாட்டு நிகழ்ச்சி விவரம்

இம்மாநாடு சனவரி 4-ம் நாள் தொடங்குகிறது; பேராசிரியர் திரு. க. அன்பழகன் அவர்கள் தலைமை வகிக்கவும்—திரு. கருத்திருமன் அவர்கள் தொடக்கவுரையாற்றிடவும்; அடுத்து 5-ம் நாள் மாநாட்டில் குன்றக்குடி அடிகளார் தொடக்கவுரையாற்றவும்—புலவர் கோவிந்தன் அவர்கள் தலைமை ஏற்றிடவும்; 6-ம் நாள் திரு. சா. கணேசன் அவர்கள் மாநாட்டைத் தொடங்கி வைக்கவும்—தலைமை நீதிபதி திரு. அனந்தநாராயணன் அவர்கள் தலைமை வகிக்கவும்; 7-ம் நாள் மாநாட்டிற்கு திரு. கி. மனோகரன் அவர்கள் தலைமை வகிக்கவும்—தொடக்கவுரையைத் திரு. என்.வி. நடராசன் ஆற்றிடவும், 8-ம் நாள் மாநாட்டில் திருமதி இராதா தியாகராசன் துவக்கவுரை ஆற்றிடவும்—திருமதி சௌந்தரம் கைலாசம் தலைமை ஏற்கவும்; 9-ம் நாள் மாநாட்டில் காயிதே மில்லத் முகமது இசுமாயில் தலைமை ஏற்கவும்—திரு. இரா. செழியன் மாநாட்டினைத் துவக்கி வைக்கவும்; 10-ம் நாள் மாநாட்டிற்கு அவ்வை துரைசாமி பிள்ளை தலைமை ஏற்கவும்—பேராசிரியர் மா. கி. தசரதன் தொடக்கவுரை ஆற்றிடவும் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறார்கள்.

### அறிஞர் அண்ணாவின் விழா நிறைவுப் பேருரை

இசையரசு தண்டபாணி தேசிகர், இசைச்சித்தர் சிதம்பரம் செயராமன், சீர்காழி கோவிந்தராசன் இசை நிகழ்ச்சிகள்—'புகாரில் ஒருநாள்' கவிதைப் போட்டி - அதற்கான பரிசளிப்பு —பரிசுப் பாடல் நூல் வெளியீடு முதலிய நிகழ்ச்சிகள் கொண்ட உலகத் தமிழ் மாநாட்டிற்கு முத்தாய்ப்பு வைப்பதுபோல் விழா நிறைவுப் பேருரையை—மாநாட்டின் இறுதிக் கட்டத்தில்—தமிழக முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்களே ஆற்றுகிறார்கள்.

### பள்ளி -- கல்லூரிகளுக்கு விடுமுறை அறிவிப்பு

இங்ஙனம் சென்னை மாநகரில் சிறப்புடன் நடக்கவிருக்கும் செந்தமிழ் விழாவினையொட்டிய சீர்மிகு நிகழ்ச்சிகளையெல்லாம் கண்டும் கேட்டும் களிக்கவிரும்பும் கல்லூரி—உயர்நிலைப்பள்ளி ஆசிரியர்க்கும், மாணவர்க்கும் வசதி செய்யும் வகையில் தமிழகக் கல்லூரிகளுக்கு சனவரி 5-ம் நாள் வரையிலும், பள்ளிகளுக்கு சனவரி 10-ம் நாள் வரையிலும் விடுமுறை அளிக்கப்பட்டிருக்கின்றது.

# நாட்டைப்பிளவுபடுத்தும் நாசகாரியம்

## மொழி மசோதா நிறைவேற்றம் குறித்து எச்சரிக்கை

## கேரள வழக்கறிஞர்கள் கருத்தரங்கில் முன்னாள் டில்லி அமைச்சர் வெளியிடும் உண்மை

திருவனந்தபுரம், டிச. 19—

நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட ஆட்சிமொழித் திருத்த மசோதா, ‘பாரபட்சமானது’ என்றும், ‘இந்தி பேசாத மக்களுக்குப் பாதகமானது’ என்றும், கேரள வழக்கறிஞர்கள் சங்கச் சார்பில் நடைபெற்ற கருத்தரங்கில் ஒரு தீர்மானம் நிறைவேற்றப் பட்டது.

‘ஆங்கிலம் ஆட்சிமொழியாகத் தொடர்ந்து நீடிக்கவேண்டும்’ என்றும், ‘அதற்குத் தக்க வழியில் அரசியல் சட்டம் திருத்தப்பட வேண்டும்’ என்றும், ‘கல்லூரிகளிலும் பல்கலைக்கழகங்களிலும் ஆங்கிலமே பயிற்றுமொழியாக இருக்கவேண்டும்’ என்றும், ‘நீதி மன்ற மொழியாகவும் ஆங்கிலமே இருக்கவேண்டும்’ என்றும் அந்தத் தீர்மானத்தில் கோரப்பட்டுள்ளது.

இந்தக் கருத்தரங்கிற்குத் தலைமைவகித்த ‘மாத்ருபூமி’ நாளிதழின் ஆசிரியரான திரு கே. பி கேசவ மேனன், ‘ஆட்சிமொழித் திருத்த மசோதா நிறைவேறியதன் விளைவாக நாடு, ‘இந்தி பேசுவோர் இந்தியா’ என்றும், ‘இந்தி பேசாதோர் இந்தியா’ என்றும் இரண்டாகப் பிரிந்துவிடும்” என்று கூறினார்.

அவர் மேலும் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

“மத்திய அரசின் மொழிக் கொள்கை அழிவைத் தருவதாகும்.

ஆட்சிமொழிச் சட்ட மசோதாவில் கடைசி நேரத்தில் கொண்டுவரப்பட்டிருக்கும் திருத்தங்கள் நிலைமையை இன்னும் மோசமாக்கும்!

மத்திய அரசின் அலுவலகங்களில் இனி மொழி பெயர்ப்புகள் செய்வதற்கு ஆண்டொன்றுக்கு ரூ. 18 கோடி நாசமாகும்! இது பயங்கரமான நாசமாகும்!

மறைந்த தலைமையமைச்சர் நேருவின் வாக்குறுதிக்கு வடிவம் கொடுப்பதற்குப் பதில், இந்தி வெறியர்களிடம் மத்திய அரசு சரணடைந்துவிட்டது!

“ஒரு சரியான மொழிக் கொள்கையை முடிவு செய்யும்போது மூன்று அம்சங்களை மனத்தில் கொள்ள வேண்டும்; ஒன்று— ‘நாட்டின் ஒற்றுமையை இதன் மூலம் காப்பாற்றமுடியுமா’ என்று பார்க்கவேண்டும்; இரண்டாவதாக—‘நிர்வாகத் துறையில் பயனுள்ளதாகவும், அமைதியாகவும் இருக்கமுடியுமா’ என்று பார்க்க வேண்டும்; மூன்றாவதாக—‘விஞ்ஞான, தொழில் நுணுக்க முன்னேற்றத் துறையில் தொடர்பு வைத்துக்கொள்ள முடியுமா’ என்று பார்க்கவேண்டும்.

இந்த மூன்று அம்சங்களையும் ஆராயுமிடத்து, ‘தற்போதைய மொழிக் கொள்கை, எதிர்காலத்தில் நாட்டைத் துன்பச் சூழ்நிலைக்கே கொண்டு செல்லும்’ என்பதில் சிறிதும் ஐயமில்லை.

நாடு முழுவதிலும் பல்கலைக்கழகப் பயிற்று மொழியாக ஒரே மொழிதான் இருக்கவேண்டும். பல்கலைக்கழகக் கட்டம்வரை வட்டார மொழியே பயிற்று மொழியாக இருக்கவேண்டும். இந்தி, உரிய வளர்ச்சியடையும்வரை உயர் கல்விக்கு ஆங்கிலமே பயிற்று மொழியாக இருக்கவேண்டும்.”

### இலட்சுமி மேனன்

இந்தக் கருத்தரங்கைத் துவக்கி வைத்த முன்னாள் மத்திய துணை அமைச்சர் இலட்சுமி மேனன், ‘நாட்டு மக்களிடையே ஒற்றுமை நிலவவேண்டுமானால், ஆங்கிலமே நிர்வாகத் துறையிலும், கல்வித் துறையிலும் பயன்படுத்தப்பட வேண்டும்’ என்றார்.

நாட்டின் பெரும் பகுதியினர் இந்தி பேசுவதாகக் கூறப்படுவதை அவர் மறுத்தார்.

“வடக்கே இப்போது பேசப்படும் இந்தி மகாராஷ்டிரம், இராஜஸ்தான், குசராத், பீகார், கிழக்கு உ. பி. முதலிய மாநிலங்களில் உள்ள கிராமப்புறத்து மக்களுக்குப் புரியாது” என்றார்.

மேலும் அவர் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

“இந்தி பேசும் மாநிலங்களில் உள்ள மக்களில் பெரும்பாலோர் படிப்பறிவில்லாதவர்கள்; இந்தி பேசாத மாநிலங்களின் பெரும்பாலோர் படிப்பறிவுள்ளவர்கள்; எனவே, படிப்பறிவில்லாதவர்களின் மொழியை ஒரு நாட்டின் ஒரே தொடர்பு மொழியாக்குவது கூடாது.

“இப்போது நிறைவேற்றப்பட்டுள்ள ஆட்சிமொழி மசோதா, இந்தி பேசாத மக்களுக்கு அநீதி இழைப்பதாகும்; எனவே ஆட்சி மொழி மசோதாவை எதிர்த்து நாம் அனைவரும் ஒன்றுபட்டுப் போராட வேண்டும்.

கடந்த பத்து நாட்களாக ஆட்சி மொழிச் சட்டத் திருத்தத்தின் மீதான விவாதத்தில் மக்களவையில் இந்தி வெறியர்கள் நடந்து கொண்ட முறை வரம்பு மீறியதாகும். இது இந்தியை விரும்புகிறவர்களையும் வெறுக்க வைக்கும்!

ஆங்கிலத்தை ‘அந்நிய மொழி’ என்று கூறுவது தவறான கருத்து; வரலாற்றுக்கு மாறுபட்ட கருத்து.

மத்திய அரசு, மாநிலங்களுடன் தொடர்புகொள்ள இணைப்பு மொழியாகவும் பல்கலைக் கழகங்களில் கல்வி மொழியாகவும் ஆங்கிலம் இருந்தாக வேண்டும்.

இந்தியை ஆட்சிமொழியாக்க விரும்பும் மொழி வெறியர்கள் இதுவரை இந்தியை வளர்க்க முன்வரவில்லை! இப்போது இதை நம்மீது திணிக்க முயற்சி செய்கிறார்கள்!”

### ‘மொழிப் பிரச்சினையல்ல’— ஆதிக்கப் பிரச்சினை’

#### கேரளக் கல்வியமைச்சர் கண்டனமும் விளக்கமும்

“தென்னாட்டுத் தலைவர்கள்— அவர்கள் எவ்வளவு உயர்ந்தவர்களாக இருந்தபோதிலும் வடநாட்டில் பேசும்போது இந்தி தவிர வேறு மொழியில் பேச அனுமதிக்கப்படுவதில்லை”

என்று கேரளக் கல்வி அமைச்சர் முகமது கோயா, டெல்லி சென்று திரும்பியபின் கூறினார். அவர் மேலும் கூறியதாவது:—

“இந்தி மட்டுமே தனி இணைப்பு மொழி என்று ஆக்கப்பட்டால்—உத்தியோகத் துறையில் தென்னாட்டவருக்கு எத்தகைய உறுதி தரப்பட்டாலும்— தென்னக மக்களின் நலன்கள் காக்கப்படமாட்டாது!

இது மொழிப் பிரச்சினையல்ல— ஆதிக்கப் பிரச்சினையாகும்; இல்லையென்றால், வடக்கிலிருக்கிறவர்கள் இந்தப் பிரச்சினையின் மீது இவ்வளவு உணர்ச்சியும் பதட்டமும் காட்டுவது ஏன்?

‘இந்தி வேண்டுமா? இந்தியா வேண்டுமா’ என்ற கேள்வி எழுமானால், இந்தி பேசுவோர், ‘இந்தியா வேண்டாம்; இந்தியே வேண்டும்’ என்றுதான் கூறுவார்கள்!

டில்லியில் இந்தி பேசாத மக்களுக்கு எதிரான காலித்தனத்தை முழுமனதுடன் மத்திய அமைச்சர்களும், மற்ற வடநாட்டுத் தலைவர்களும் கண்டிக்காதது மிகுந்த வியப்பைக் கொடுக்கிறது!”

### உஸ்மானிய பல்கலைக்கழகத் துணைவேந்தர் கருத்து

ஐதராபாத், டிச. 18—

“தற்போது நாடாளுமன்றம் நிறைவேற்றியுள்ள ஆட்சி மொழி மசோதா இந்தி பேசாத மக்களுக்குப் பெரும் இடையூறு விளைவிப்பதாகும்”

என்று உஸ்மானியாப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் டாக்டர் டி. எஸ். ரெட்டி கூறினார். அவர் மேலும் குறிப்பிட்டதாவது:—

“மொழிப் பிரச்சினை தீர, இரு சாராருக்கும் இணக்கமான முறைகளை அணுகுவதே விரும்பத்தக்கதாகும்; இப்பொழுதுகூட ஒன்றும் காலங் கடந்துவிடவில்லை; ஒவ்வொருவரும் திருப்தியடையக்கூடிய முறையில், சிறிது விட்டுக் கொடுக்கும் முறையில் தீர்வுக்கான வழிகளைக் கண்டறியலாம்.

# வடவரின் அவமதிப்பைத் தென்னாட்டவர் மறக்கப்போவதில்லை

## அண்ணா தலைமை காரணமாகத்தான் தமிழக மாணவர்கள் அடக்கத்துடன் இருக்கின்றனர்!

### ஆங்கில எதிர்ப்புக் கிளர்ச்சியால் இந்தி எதிர்ப்பை வளர்க்கின்றனர்

இந்தி மாநிலங்களிலும், புதுடில்லியிலும், ‘ஆங்கில எதிர்ப்புக் கிளர்ச்சி’ என்ற பெயரால் நடைபெற்றுவரும் காலித்தனங்களைக் கண்டு வருந்தி, சஞ்சல் சர்க்கார் என்ற எழுத்தாளர், ‘டெக்கான் ஹெரால்டு’ 15—12—67 இதழில், ‘நடுப்பகலில் காரிருள்’ என்றொரு கட்டுரை எழுதியிருக்கிறார்; கட்டுரையின் சில பகுதிகள் பின்வருமாறு:—

“உத்தரப் பிரதேசத்திலும், மத்தியப் பிரதேசத்திலும், டில்லியிலும், பீகாரிலும் நடைபெறும் ஒவ்வொரு நிகழ்ச்சியும் இந்தி பேசாத மாநிலங்களின் இந்தி எதிர்ப்பைத் தவிர்க்க முடியாததாக்கப் போகின்றன!

கிழக்குப் பாகிஸ்தானத்தில், வங்க மொழிக்காகப் போராடி மடிந்தவர்களுக்குத்தான் இறுதி வெற்றி கிடைத்தது, இன்றைக்கு அங்கே உருது - வங்காள மொழி இரண்டுமே சமத்துவத்துடன்கூடிய ஆட்சி மொழிகளாக விளங்குகின்றன!

தென்னாட்டிலும், வங்காளத்திலும், நாகாலாந்து போன்ற பகுதிகளிலும் உள்ளவர்கள், ‘இந்தித் திணிப்பு முயற்சி, தங்களுடைய தனித்தன்மையையே குலைத்துவிடுமோ— தாங்கள் போற்றிப் பாராட்டும் தன்மைகளையெல்லாம் அழித்துவிடுமோ’ என்று அஞ்சுகிறார்கள்!

காஷ்மீரிலும், இந்தியாவெங்கிலுமுள்ள முஸ்லிம்கள், ‘இந்திக்காரர்களின் இந்த இந்திக் கிளர்ச்சி, நாளைக்கு இந்துக்களின் கிளர்ச்சியில் கொண்டுபோய் விட்டுவிடுமோ’ என்று கவலை கொண்டுள்ளார்கள்!

நாகாலாந்தில், அசாம் மலைவாழ் மக்களின் அனைத்துக் கட்சித் தலைவர்கள், இப்படிப்பட்ட இந்தியாவில் — அவர்கள் என்ன மொழி பேசவேண்டும் என்பதையும், அவர்கள் என்ன புத்தகங்களைப் படிக்க வேண்டும் என்பதையும், அவர்கள் எந்தமாதிரியான ஆடைகள் உடுத்த வேண்டும் என்பதையும் ஒரு கும்பல்தான் தீர்மானம் செய்யும் என்கிற நிலைமை ஏற்பட்டுள்ள இந்தியாவில்—‘தங்களுக்கு உண்மையிலேயே ஏதாவது இடம் உண்டா’ என்று சிந்திக்கிறார்கள்!

தென்னிந்தியர்கள், வடநாட்டின் பல பகுதிகளில் தாங்கள் அவமானப்படுத்தப்படுவதை அவ்வளவு எளிதில் மறந்துவிடப்போவதில்லை! வடநாட்டு வெற்றுவேட்டுப் பிரசாரகர்களைவிட, தமிழக மாணவர்களிடையே திரு. அண்ணாதுரை அவர்களுக்கு நிறைய செல்வாக்கு இருப்பதனால்

(3-ம் பத்தி பார்க்க)


(5-ம் பத்தியின் தொடர்ச்சி)

தான் அங்கே அந்த மாணவர்கள் அடக்கத்துடன் இருக்கிறார்கள்!

ஜெயப்பிரகாஷ் நாராயணன், இன்றுள்ள சிறந்த இந்திப் பேச்சாளர்களில் ஒருவர், மனத்தில்பட்டதை மறைக்காமல் சொல்லும் துணிவு பெற்றவர் அவர்; கலவரக்காரர்கள், அவருடைய வீட்டைக்கூட விட்டுவைக்காமல், அதனைக்கூட முற்றுகை இட்டுள்ளார்கள்!”



# ஸைரப்பர்

## சிறந்த மோட்டார் உறுப்புகள்



பியட் 1100, ஹிந்துஸ்தான் அம்பாஸிடர்/லாண்ட்மாஸ்டர் கார்களுக்கும், பார்கோ, அசோகலேலாண்ட் பஸ்/லாரிகளுக்கும் உகந்த ரப்பர் உறுப்புகள் தனித்தனியாகவும் ஒன்று சேர்ந்த உறுப்புகளுடனும் விநியோகிக்கப்படுகின்றன.

செயற்கை ரப்பரிலிருந்து உருவாக்கப்பட்ட ஸைரப்பர் உறுப்புகள் நீடித்து உழைக்கும்.



TVS

SIRUBBER

சுந்தரம் இண்டஸ்ட்ரீஸ் பிரைவேட் லிமிடெட்
இண்டஸ்ட்ரியல் எஸ்டேட்
ரப்பர் யூனிட், மதுரை 7

N-3950

# டில்லியின் பாசிச வெறிபிடித்த நடவடிக்கை

## தூக்கியெறியப்பட்ட காங்கிரசு புழக்கடை வழியே நுழைய முயற்சி

### மக்களவையில் கழக உறுப்பினர் கோ. விசுவநாதன் கண்டனம்

புதுடில்லி, டிச. 20—

"காங்கிரசுக் கட்சி மத்திய அரசின் மூலம் கொண்டுவந்திருக்கும் சட்டவிரோத நடவடிக்கைகளைத் தடுக்கும் மசோதா பாசிச வெறி பிடித்த நடவடிக்கை ஆகும்! காங்கிரசின் 'அதிகாரப் பசி'க்கு அது ஒரு சான்று ஆகும்!

"நாட்டின் வட்டாரங்களிடையே ஏற்றத்தாழ்வுகள் இருக்கும் வரை தேசிய ஒற்றுமையைப் பலப்படுத்தவே முடியாது! பிரிவினை இயக்கங்களின் தோற்றம்—வளர்ச்சிக்குக் காரணம் என்ன என்பதைக் கண்டறியாமல், வெறும் சட்டம் போட்டுத் தடுக்க முயலுவதில் பொருள் இல்லை!"

இவ்வாறு, மக்களவையில், கழக உறுப்பினர் கோ. விசுவநாதன், சட்டவிரோத நடவடிக்கைகள் தடுப்பு மசோதாவின் இரண்டாவது வாசிப்பின்மீது நடைபெற்ற விவாதத்தின்மீது பேசுகையில் சுட்டிக் காட்டி எச்சரித்தார். அவர் மேலும் கூறியதாவது :—

"நாட்டின் சரிபாதிப் பகுதியில் முன் வாயில் வழியே தூக்கி யெறியப்பட்ட காங்கிரசுக் கட்சி கொல்லைப்புற வழியில் உள்ளே நுழையப் பார்க்கிறது! அதனால்தான் இந்த மசோதாவைக் கொண்டுவந்துள்ளது!

"இந்த மசோதா, அரசியல் சட்டத்தின் மீதும், பொதுமக்கள் நம்பிக்கை மீதும் செய்யப்பட்ட மோசடியாகும்!

"பிரிவினைக் கோரிக்கை இருக்கிறதென்றால், அதன் மூல காரணத்தை அறியவேண்டும்.

"பொருளாதார ஏற்றத்தாழ்வும், வட்டார ஏற்றத்தாழ்வும் இருக்கும்வரையில், இந்தச் சக்திகளை அரசாங்கம் வெறும் சட்டத்தால் அடக்கிவிட முடியாது.

"அரசியல் கட்சிகளுக்கு எதிராக இச்சட்டம் உள்ளது."

#### கிருபளானி கடும்தாக்கு

மசோதாவின் முதல் வாசிப்பின் போது பேசுகையில், ஆச்சாரியா கிருபளானி, மசோதாவை எதிர்த்துப் பேசுகையில் குறிப்பிட்டதாவது :—

"காங்கிரசுக் கட்சி தன் வீட்டை ஒழுங்காக வைத்துக்கொண்டாலே போதும்; அப்படிச் செய்தால், அரசியல் சட்டத்தில் தரப்பட்டுள்ள அடிப்படை உரிமைகளை ஒரே அடியில் தகர்க்கும் இவ்வகையான மசோதாவுக்குத் தேவையே இராது!

அரசாங்கம் இந்த நடவடிக்கையை எடுக்கும் நோக்கம் பற்றி எனக்கு ஐயமே இல்லை; ஆனால், அதிகாரத்திலுள்ளவர்கள் எப்போதுமே குறுக்கு வழியைப் பயன்படுத்த வாய்ப்பிருக்கும்போது அதையே பயன்படுத்துவர்!

இந்த மசோதா தேவைக்கு மேற்பட்டது; இதன் விதிகள், தயாரிக்கப்பட்ட நோக்கத்திற்கு அப்பாற்பட்டு, வேறு நோக்கத்திற்குப் பயன்படுத்தப்படலாம்!

நாட்டு நலனுக்கு விரோதமான செயல்கள் போன்றவைகளை அடக்க, அரசாங்கம் ஏற்கனவே இந்தியத் தண்டனை இயல் சட்ட விதிகளில் போதிய ஆயுதங்களைப் பெற்றுள்ளது; எனவே, இந்த மசோதா மிதமிஞ்சியது!

பிரிவினையைப்பற்றிக் கூறுவோரின் பேச்சை மக்கள் ஏன் கேட்கின்றனர்—புரட்சி ஏற்பட வேண்டுமென மக்கள் ஏன் விரும்புகிறார்கள் என்பதை அரசாங்கம்புரிந்துகொள்ளவேண்டுமென விரும்புகிறேன்.

மக்கள் ஏன் சீனத்தை அழைக்கின்றனர்? காஷ்மீரத்தில் சிலர் ஏன் அரசாங்கத்திற்கு விசுவாசமற்றிருக்கின்றனர்?—இதற்கெல்லாம் காரணம், பொருளாதாரப் பிரச்சினைகளை அரசாங்கம் தீர்க்க முடியாமையே!

சரியான மருந்தைப் போடுவதற்குப் பதிலாக வேறு முறைகளைக் கையாளுவதால் எவ்விதப் பலனும் ஏற்படப் போவதில்லை!

இந்தச் சக்திகளை எல்லாம் அசாதாரணமான சட்டங்களால் நசுக்கிவிடலாமென அரசாங்கம் கருதுகிறதா?

காங்கிரசு ஆளுகின்ற மராட்டியம், கருநாடகம் போன்ற மாநிலங்களில்கூட, அக்கட்சிக்குள் தகராறுகள் இருக்கின்றன; ஆகவே, காங்கிரசுக் கட்சி தன் சொந்த வீட்டை ஒழுங்காக வைத்துக்கொண்டாலே போதும்—அப்படிச் செய்தால் இந்த மசோதாவுக்கு அவசியமே இல்லை."

#### வலியுறுத்தப்பட்ட திருத்தம் தோற்கடிக்கப்பட்டு விட்டது

பிரிவு பிரிவாக இரண்டாம் வாசிப்பின்மீது விவாதம் நடைபெற்றபோது, 'சட்டத்தின் எல்லையிலிருந்து தொழிற்சங்கங்களையும், அரசியல் கட்சிகளையும் நீக்கிவிட வேண்டும்' என, கழக உறுப்பினர்களும், ச. சோ. கட்சி உறுப்பினர்களும் கோரி, 'சட்டத்தில் திருத்தம் செய்யப்படல் வேண்டும்' என வலியுறுத்தினர்; ஆனால், அத்திருத்தம் தோற்கடிக்கப்பட்டுவிட்டது.

### சிவப்பு நாடா விளைவித்த நன்மை!

மதுரை, டிச. 20—

அனைவருடைய கண்டனத்துக்கும் ஆளாகக்கூடிய 'சிவப்பு நாடா' முறை, பாராட்டக்கூடிய ஒரு காரியத்துக்குப் பயன்பட்டிருக்கும் செய்தி மதுரை நகராட்சிமன்றக் கூட்டத்தில் வெளியாயிற்று.

முப்பது மாத சிவப்பு நாடா முறை, மதுரை நகராட்சிப் பூங்காவை, அழிக்கப்படுவதிலிருந்து காப்பாற்றியது.

மீனாட்சி கோயிலுக்கு அருகில் உள்ள நகராட்சி மன்றப் பூங்காவை அழித்துவிடுமாறு 1965-ல் அரசு ஆணை பிறப்பித்தது; மீனாட்சிக் கோயில் நிர்வாகத்தினர், அந்த இடத்தில் மார்க்கெட் ஒன்றைக் கட்டுவதற்கு வசதியாகவே இந்த ஆணை பிறப்பிக்கப்பட்டது; அந்த ஆணையை நீக்க நகராட்சி எந்தவித முயற்சியும் செய்யத் தவறிவிட்டது.

எப்படியோ, 'சிவப்பு நாடா' முறையினால், அரசின் ஆணை நிறைவேற்றப்பட முடியாமற் போயிற்று!

கடந்த வாரம் வரை அந்த ஆணை செயல்படுத்தப்படாமலே இருந்தது.

கடந்த வாரம், அமைச்சர் இரா. நெடுஞ்செழியன் இந்தப் பூங்காவிற்கு வந்திருந்தார்; இது பற்றி முந்திய அரசின் ஆணையைத் தள்ளுபடி செய்ய நடவடிக்கை எடுப்பதாகவும் கூறினார். இவ்விதம் அந்தப் பூங்கா தப்பியது!

### மாநிலங்களுக்கு உதவ முடியாதாம்!

#### அகவிலைப் படி உயர்வு—டில்லி கைவிரிப்பு!

புதுடில்லி, டிச. 20—

"மாநில அரசுகள், தங்கள் ஊழியர்களுக்குக் கிராக்கிப் படியை உயர்த்த முடிவு செய்தால், அதற்கான செலவை அந்தந்த அரசுகளே ஏற்க வேண்டும்"

என்று, மக்களவையில், நிதியமைச்சர் மொரார்ஜி தேசாய் கூறியிருக்கிறார்.

"மத்திய அரசு ஊழியர்களுக்காக அறிவிக்கப்பட்ட கூடுதல் கிராக்கிப்படி சம்பந்தமாக மாநில அரசு ஊழியர்களுக்கு மத்திய அரசு, செலவு ஏதும் செய்ய வேண்டியதில்லை" என்றும் அவர் கூறியிருக்கிறார்.

## அடுத்தது என்னவோ?

எல்லாம் முடிந்தது! மத்திய அரசின் ஆட்சி மொழியாக இந்தியை ஆக்கிடும் மசோதாவை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றியாகிவிட்டது! அதோடு விட்டுவிடலாமா?

சினாய் பாலைவனத்தில் குன்றுப் பகுதியின் புதரில் எரியூட்டி மோசேயின் கவனத்தைக் கவர்ந்து கட்டளை பிறப்பித்த கடவுள், இந்தியை ஆட்சி மொழியாக்கிட ஆணை பிறப்பித்திருக்கிறார் அல்லவா வடநாட்டு வெறியர்களுக்கு!—சும்மா இருப்பார்களா?

இரண்டு நாட்களுக்கு முன்னாலே திரிலோக் சிங் என்ற பி.சோ. உறுப்பினர், தனி நபர் மசோதா ஒன்றைக் கொண்டுவந்தார்—மாநிலங்கள் அவையில்; மக்கள், இந்தியை அரசாங்க வேலைகளில் பயன்படுத்துவது அதிகரித்துவருகிறதாம்; வளர்ந்துவரும் தேவையைக் கட்டுப்படுத்துவதுபோல் அரசியல் சட்டத்தின் 345-ம் பிரிவு இருக்கிறதாம்;—

ஆகவே

"மத்திய அரசின் ஆட்சிமொழியாக இந்தியை ஆக்கினால் போதாது; மாநில ஆட்சிமொழி எதுவாயினும், அத்துடன் யாரேனும் விரும்பினால், மாநிலத்துக்குள் இந்தியை அரசாங்க வேலைகளுக்குப் பயன்படுத்தும்வகையில் அரசியல் சட்டத்தின் 345-வது பிரிவைத் திருத்தவேண்டும்"

என்று கோரியிருக்கிறார் திரிலோக் சிங்.

**இந்த மசோதா ஏற்கப்படுமா இல்லையா--அது, அடுத்தது; ஆனால், வடவரின் இந்தி வெறி எந்த அளவுக்கு இருக்கிறது என்பதைப் புரிந்துகொண்டால் போதும்!**

### நடக்க இருப்பவை

#### 22--12--67

**திருவெண்ணெய்நல்லூர்**

எம். ஜி. ஆர். ரசிகர் மன்றத் திறப்பு விழா; மாலை 6-30 மணிக்கு திரௌபதியம்மன் கோயில் திடலில்; தலைவர்: அ. சோ. குமாரசாமி பி.எஸ்சி.; திறப்பாளர்: அமைச்சர் ஏ. கோவிந்தசாமி; கொடியேற்று வோர்: கு. மன்னுதன்; பேசுவோர்: கோவிந்தராசன் எம்.எல்.ஏ., இராமச்சந்திரன் பி.இ. ஆனர்ஸ் எம்.எல்.ஏ., தி. வ. அண்ணாதாசன், தி. வ. செயராமன், இரா. வரதாசன், கோ. காத்தவராயன், ஆர். தண்டபாணி, சு. சனநாயகம்.

**கருப்பூர்**

தி. மு. க. சார்பில் திருவையாறு தொகுதிச் சட்டமன்ற உறுப்பினர் புலவர் கா. முருகையனுக்குப் பாராட்டு; மாலை 5-மணிக்கு; தலைவர்: வை. மாவடியார்; பேசுவோர்: வே. கண்ணன், துரை. வையாபுரி, ச. தங்கம், ச. குழந்தைவேலன், கலியபெருமாள், நாகமணி.

### காட்டூர் கோபால்

சுற்றுப்பயணம்

டிச. 22: கோவில்பட்டி, தாழையூத்து; 23: பழயபேட்டை; 24: விக்கிரமசிங்கபுரம், கல்லிடைக்குறிச்சி; 25: பாபநாசம், விக்கிரமசிங்கபுரம்; 26: சங்கரன்கோவில், இராசபாளையம்.

### கரூரில் மனைக்கட்டுப் பட்டா வழங்கு விழா

கரூர்—பசுபதிபாளையத்தில், 21—12—67 பகல் 12-30 மணிக்கு திரு. பெ. சௌந்திரபாண்டியன் எம்.எல்.ஏ. தலைமையில், தாந்தோணி கிராமம் கொளந்தா கவுண்டனூரிலுள்ள தாழ்த்தப்பட்ட ஏழை மக்களுக்குக் குடியிருப்பு மனைப் பட்டாவும், தையல் மெஷினும் அமைச்சர் திருமதி சத்தியவாணிமுத்து அம்மையாரால் வழங்கப்படும்.

### திருமங்கலத்தில் குடிநீர் தேக்கத் திறப்பு விழா

#### எம். ஜி. இராமச்சந்திரன் கலந்துகொள்கிறார்

லால்குடி வட்டம்—திருமங்கலம் ஊராட்சி மன்ற மேல்மட்ட குடிநீர்த் தேக்கத் திறப்பு விழா 21—12—67 பிற்பகல் 2 மணிக்கு ஊராட்சி ஒன்றியத் தலைவர் **அன்பில் தர்மலிங்கம்** தலைமையில் நடைபெறும்.

புரட்சி நடிகர் எம்.ஜி.இராமச்சந்திரன் எம்.எல்.ஏ. அவர்கள் குடிநீர்த் தேக்கத்தை திறந்துவைப்பார்; திருவள்ளுவர் படத்தை மு. க. து. நடராசன் திறந்து வைப்பார்.

### திருச்சி தொலைபேசி ஆலோசனைக் குழு

#### ஆர். நாகசுந்தரம் உறுப்பினராக நியமனம்

திருச்சி இரண்டாவது தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு. ஆர். நாகசுந்தரம், திருச்சிராப்பள்ளி தொலைபேசி ஆலோசனைக் குழு உறுப்பினராக 1969 நவம்பர் 30-ம் நாள் வரையில் தமிழகச் சட்டமன்றத்தின் சார்பாக, மத்திய செய்தித்துறை அமைச்சர் அவர்களால் நியமிக்கப்பட்டிருக்கிறார்.

ரோஜா பாக்கு & புகையிலை
ROJA
N. V. K. M. & சன்ஸ், திண்டுக்கல்

## பொறுப்பைப் பெரியவர்களிடம் விட்டுவிடுக!

### தமிழக மாணவர்கட்கு அமைச்சர் நெடுஞ்செழியன் வேண்டுகோள்

சென்னை, டிச. 19—

மொழிப் பிரச்சினை குறித்துக் கிளர்ந்தெழுந்து நிற்கும் தமிழக மாணவர்களுக்குத் தமிழகக் கல்வித் துறை அமைச்சர் விடுத்துள்ள செய்தியில், மொழிப் பிரச்சினையைப் பெரியவர்களிடம் விட்டுவிடுமாறு அறிவுரை கூறியுள்ளார்.

செய்தியாளர்களிடம் அவர் தெரிவித்ததாவது :—

"தமிழக அரசு, மொழிப் பிரச்சினை தொடர்பாகத் தெளிவான — திட்டவட்டமான கொள்கையினைக் கொண்டிருப்பதால் இதுபற்றி மாணவர்கள் எத்தகைய ஐயப்பாடும் கொள்ளவேண்டாம்.

"இப்பிரச்சினையைப் பெரியவர்களிடம் விட்டுவிட்டு மாணவர்கள் தங்கள் கல்வியில் கவனம் செலுத்த வேண்டுகிறேன்.

"தி. மு. க. ஆட்சி, தனது கடமையைச் செய்துகொண்டு வருகிறது; இத்தருணத்தில் மாணவர்கள் தங்கள் படிப்பைப் பாழாக்கிக் கொள்ளாமல் இருக்கும்படியும், மாநிலத்தில் அமைதி நிலவ ஒத்துழைக்கும்படியும் கேட்டுக்கொள்கிறேன்.

"அமைதியை நிலைநாட்டுவதன் மூலம்தான் தமிழக மாணவர்கள் தாங்கள் உறுதியாகவும் தெளிவாகவும் இருக்கிறார்கள் என்பதைக் காட்டமுடியும்."

### செஞ்சீனாவின் புதிய ஆயுதம்!

புதுடில்லி, டிச. 20—

"செஞ்சீனா இப்போது தயாரித்துள்ள ஏவுகணை ஆயுதங்கள், 500 மைல் முதல் 1,000 மைல் வரை பாயக்கூடியவை ஆகும்"

என்று நாடாளுமன்ற அவையில் தெரிவித்த அமைச்சர் சுவரண் சிங், 'சீனா, இந்தியாவை அடியோடு அழித்துவிடும் என்று மிகை பட்ட அளவுக்கு அச்சம் ஏற்பட்டிருக்கிறது; அவ்வாறு அச்சம் கொள்ளும் நாடு தன்னைத்தானே அழித்துக் கொள்ளும்' எனக் கூறினார்.

ஆனால், அணு ஆயுத அரசாக செஞ்சீனா எழுவதைக் குறித்து உறுப்பினர்கள் பலர் கவலை தெரிவித்தனர்; 'இந்தியாவுக்கு இங்கிலை அச்சுறுத்தலாகும்' எனக் குறிப்பிட்டனர்.

### மாநில ஆட்சிமொழியாக பஞ்சாபி

சண்டிகார், டிச. 19—

குர்முகி எழுத்தோடு கூடிய பஞ்சாபி மொழியை ஆட்சிமொழியாகக் கொள்வதென பஞ்சாப் மாநிலச் சட்டமன்றத்தில் மசோதா ஒன்று நிறைவேற்றப்பட்டது.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக, திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு, அழகிரி அச்சகத்தில் (24, சூரியநாராயண செட்டித் தெரு, சென்னை-13) அச்சிட்டு வெளியிடப்பெற்றது.